**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.69
https://ngmtamil.in/

# பழந்தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற வேளாண்மைக் கூறுகள்

**முனைவர் ரா.செண்பகவள்ளி,**

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி. senbatamilsfrc@gmail.com.

**முன்னுரை**

வேளாண்மை என்பது நிலத்தோடு தொடர்புடைய தொழிலும் வாழ்வும் ஆகும். நிலமே மனிதனின் இருப்பிற்கும் வாழ்விற்கும் ஆதாரமாக அமைந்துள்ளது. பஞ்சபூதங்களில் அதுவே மனிதனுக்குத் தேவையான அனைத்து கனிம வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. நிலமில்லையேல் உணவு, உடை, உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெறுவது அரிதாகும். எனவே நிலத்தைப் பேணுவதும் பாதுகாப்பதும் நிலத்தோடு தொடர்புடைய இயற்கையைப் போற்றுவதும் மக்களின் வாழ்வில் மிக முக்கியச் செயல்பாடாக அமைந்துள்ளது. வேட்டை சமூகத்திலிருந்து மேய்ச்சல் சமூகமாக பயணித்த மனித இனம் நிலத்தின் அருமை பெருமைகளை உணர்ந்து வாழத் தலைபட்டபோதே வேளாண்மை தொடங்கிவிட்டது. வேளாண்மைச் செயல்பாட்டில் முதன்முதலாக அமைவது நிலம்சார் வாழ்வியல் ஆகும். நிலம்சார் வாழ்வியல் என்பது பரந்து விரிந்த உலகில் நிலத்தின் தன்மைக்கேற்ப தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது. அந்தவகையில் பழந்தமிழர் மலை, காடு , கழனி, கடல் என தன் நிலப்பரப்புக்களை அறிந்து, அதன் தட்பவெப்ப நிலைக்கேற்ப வாழத் தலைபட்டனர். நாடோடி வாழ்க்கையிலிருந்து முற்றிலும் மாறி ஓரிடத்தில் சமூகமாகக் கூடி வாழ நிலமே காரணமானது. ஓரிடத்தில் தங்கி தனக்கென இருப்பிடத்தையும் வாழ்வியலையும் அமைத்துக்கொண்டனர். அதற்கு வேளாண்மை அவர்களுக்குக் கைகொடுத்தது. நிலத்தை ஆள்வது வேளாண்மை எனச் சொல்லப்பட்டாலும் நிலப்பயன்களை உருவாக்குவதும் அதனோடு தொடர்புடைய அனைத்துச் செயல்பாடுகளும் வேளாண்மையோடு தொடர்புடையது ஆகும். பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்திலும் மனிதனது வேளாண்மைச் செயல்பாடுகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. அந்த வகையில் நிலம் சார் வாழ்வியலில் மனிதனின் உழைப்பும் தொழிலும் பற்றிய செயல்பாடுகள் மரபுகளாகப் போற்றப் பெறும் தன்மையை ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

**மலை நிலத்தின் இயல்பு**

நிலம் தனக்குள் பல்வேறு சத்துக்களைக் கொண்டுள்ளதால் மண்ணைப் பொன்னாக்கும் ஆற்றலோடு விளங்குகிறது. தன்னில் பல வளங்களைக் கொண்டு புதுப்பித்தல் செயல்பாடு நொடிதோறும் நடந்துகொண்டிருப்பதால் வினையாற்றுவதில் நிலத்திற்கு இணையாக எதையும் சொல்ல முடியாது. அத்தகைய ஆற்றலைப் பெற்ற நிலத்தில் வளங்கள் இயற்கையாக அமைவது படைப்பின் ஒருவகைப் பரிமாணமேயாகும். மலையும் மலையோடு தொடர்புடைய நிலத்தின் வளமாக,

" உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே சிறியிலை வெதிரினெல் விளையும்மே
இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்கும்மே
மூன்றே கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்குமே
நான்கே அணிநிற வோரிபாய்தலின் மீது அழிந்து
திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே."

(புறம் 109.3-8)

நெல், பலா, வள்ளிக்கிழங்கு, தேன் முதலியவை இயற்கையாக விளைந்ததை புறநானூறு குறிப்பிடுகிறது. இதில் மனிதன் ஆற்றல் இல்லாத இயற்கையின் பேராற்றலைக் காண்கிறோம். இவ்வியற்கை ஆற்றலைக் கொண்டே நிலம் தனது பயனைத் தொடர்ந்து பல்லுயிர்கள் வாழ தனது பங்களிப்பைச் விடாது செய்துகொண்டிருக்கிறது. இது இயற்கையாக நடைபெறுவதால் இதனை நிலத்தின் இயல்பினில் ஒன்றாகக் கொள்ளலாம். **வேளாண்மையில் கால்நடையும் புன்செய் நிலமும்**

இயற்கையின் பயனை அடைந்த மனித இனத்திற்கு வேட்டைச் செயல்பாட்டில் கிடைக்கப்பெற்ற சாதுவான உயிரினங்கள் மனிதன் முன்னேறப் பலவகையில் காரணமாக இருந்தன. அவற்றில் ஆடு, மாடுகள் முக்கியத்துவம் பெற்றன. அவைகளைப் பழக்கப்படுத்தி இறைச்சியும் பால் பயன்களையும் பெற்றனர். முல்லைநிலம் முழுவதும் கால்நடைப் பொருளாதாரம் மற்றும் புன்செய் நிலவேளாண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்ததை,

"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ
டிந்நான் கல்லது உணாவுமில்லை"

(புறம் 335 . 4-6)

என்ற பாடல் சிறுதானிய உற்பத்தி வேளாண்மையை எடுத்துரைப்பதைக் காணலாம். வரகு, தினை, கொள்ளு, அவரை என்ற நான்குவகை புன்செய் உணவுப்பொருள் தயாரிப்பைக் குறிக்கின்றது.

**உணவு உற்பத்தியும் மக்கள் வாழ்வியலும்**

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

மருத நிலமும் நெய்தல் நிலமும் மற்ற நிலங்களிலிருந்து வேறுபட்டு நின்று மனித இனத்தை வளங்கொழிக்கச் செய்கிறது. ஆற்றுப்படைப் பாடல்கள், புறநானூறு, பதிற்றுப்பத்து போன்ற நூல்களில் இடம்பெற்ற செய்திகளின் அடிப்படையில் நெல் விதைத்தல், நாற்றுநடுதல், கடாவிடுதல், கரும்பாலை உருவாக்குதல் போன்ற பல வேளாண் தொடர்புடைய கருத்துக்களை அறியமுடிகிறது.

“குடக்காற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றும்”

பெரும் 240-41

என்ற பாடலில் நெல்வயலில் மேற்கில் இடப்பட்ட நெற்குவியலின் குப்பை வடக்கில் உள்ள செம்பொன் மலைபோலத் தோன்றியதாகக் கூறப்படுகிறது. செயற்கையாக உருவாக்கப்பட்ட வேளாண்மையில் நெல்உற்பத்தியின் செயல் செயல் வருணனையாக இடம்பெற்று உணவு உற்பத்தியை எடுத்துரைக்கிறது.

“கோடை நீடினும் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத்திருக்குங்

(பெரும் 272-273)

கோடைக்காலம் நீட்டித்தாலும் குறைவுபடாத நீர்நிலையைக் கொண்டிருந்த குளங்களைின் பெருமையை மேற்கண்ட பாடல் விளக்குகிறது. உழவிற்கும் வாழ்விற்கும் முக்கியமாகக் கருதப்படும் தண்ணீரைத் தேக்கிவைக்கக் குளங்களை உருவாக்கினர்.

“சிதரற் பெரும்பெயல் திறத்தலிற் றாங்காது
குணக்கடற் கிவர்தருங் குரூஉப்புனலுந்தி
நிவந்து செனீததங் குளக்கொளச்சாற்றிக்
களிறுமாய்க்குங் கதிர்க் கழனி”.

(மதுரை 244-247)

என்ற மதுரைக்காஞ்சிப் பாடலில் தாங்காது பெய்யும் மழைவரத்தால் பெருகிய ஆறுகளில் உள்ள நீரானது கீழ்த்திசைக் கடலை நோக்கிச் செல்கிறது. அந்த வளமான நீர்ப்பெருக்கால் களிற்றினை மறைக்கும் நெற்கதிர் விளைந்திருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது.அதனாலேயே அங்கு பசி என்பது இல்லாமல் மக்கள் வாழ்ந்தனர் என்பதை,

“தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லற் பேரூர்”

பெரும் 253-254)

என மருதநில பேரூர் சுட்டடபட்டுள்ளது. செந்நெல், வாளைமீன், வரால், நண்டு, வெண்சோறு போன்றவை உழவர்களின் தொழிலைக் குறிப்பிடும் உணவுப்பொருளாக அறியமுடிகிறது.

“கொடுங்கால் புன்னைக் கோடு துமித்து இயற்றிய

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தல்
இளையவரும் முதியவரும் கிளையுடன் துவன்றிப்
புலவுநுனைப் பகழியும் சிலையுமானச்
செவ்வரிக் கயலோடு பச்சிறாப் பிறழும்"

(பெரும் 266-270)

என்ற பாடலடியில் மனைத்தோட்டத்தின் இயல்பு புனையப்பட்டுள்ளது. உணவிற்குப் பயன்படவல்ல அவரை, பீர்க்கு, புடலை, பாகல் போலும் காய்கள் நெய்தல் நில மக்களின் தோட்டப் பயிரகைளாக வளர்க்கப்பட்ள்ளன.

**முடிவுரை**

இவ்வாறாக பழந்தமிழ் இலக்கியங்களில் நிலங்கள்தோறும் தோன்றிய , தோற்றுவிக்கப் பெற்ற மரபுசார் வேளாண்மைக்கூறுகள் கண்டறியப்பெற்றுள்ளன. மலை நிலத்தில் இயற்கையாக விளைந்த பொருட்கள் இயற்கை வேளாண்மையாக அறியப்படுகிறது. புன்செய் நிலவேளாண்மையாக சிறுதானிய விளைச்சலைக் கணக்கில் கொள்ளலாம். செயற்கை வேளாண்மை மருதநில மக்களால் உருவாக்கப்பட்டு உ ணவு உற்பத்தி செய்யப்ப்டுள்ளது. நெய்தல் நிலத்தில் மனைத்தோட்ட வேளாண்மையாக காய்கறிகள் பயிரிடுவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு பழந்தமிழகத்தில் இடம்பெற்ற வேளாண்மை பற்றிய கருத்துக்களை சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன எனில் மிகையாகாது.